நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.72 அடி**

First Published : 02 Apr 2011 09:22:31 AM IST

ஈரோடு, ஏப். 1: பவானிசாகர் அணை நீர்மட்டம வெள்ளிக்கிழமை 74.72 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,438 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வாய்க்காலில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 13.09 டிஎம்சி.

**மூலிகைக் கண்காட்சி சென்னையில் தொடக்கம் அனுமதி இலவசம்**

First Published : 02 Apr 2011 02:49:30 AM IST

சென்னை,ஏப்.1: அரிய மூலிகைகளின் கண்காட்சி சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை (ஏப்.1) தொடங்கியது.

இரண்டு நாள் நடைபெறும் இந்தக் கண்காட்சியை பார்வையிட, பொதுமக்களுக்கு அனுமதி இலவசம்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறைகளை ஒருங்கிணைக்கும் வண்ணம், அந்தந்தத் துறைக்கென ஒவ்வொரு தினம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடைப்பிடிக்கப்படுகிறது.

அந்த வகையில், இந்திய மருத்துவமான ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவ முறைகளின் கூட்டான "ஆயுஷ்' தின விழா ஏப்ரல் 2-ம் தேதி கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு, இந்த அரிய வகை மூலிகைக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியில் சுமார் 90 வகையான மூலிகை வகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியைப் பார்வையிடும் பொதுமக்களுக்கு அந்தந்த மூலிகைகளின் பெயர், அவற்றின் குடும்பம், மூலிகைகளின் சிறப்பு, செடிகளின் எந்த பாகம் மருந்தாக பயன்படுகிறது என்பவை குறித்து விளக்கப்படும்.

சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மூலிகைகளின் சிறப்பு குறித்து பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மயில்வாகனன் நடராஜன் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. எந்தெந்த நோய்களுக்கு என்னென்ன பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஊழியர்களுக்கு விளக்கப்பட்டது.

இது குறித்து பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத் துறைத் தலைவர் மருத்துவர் என்.கபிலன் கூறியது:

செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

மேலும் "ஆயுஷ்' மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பாட்டு போட்டி மற்றும் குழு நடனப்போட்டி ஆகியவை நடைபெறவுள்ளன.

மாலையில் ஆயுஷ் தின விழாவின் நிறைவு நிகழ்ச்சி நடைபெறும். சுகாதாரத் துறை முதன்மைச் செயலர் வி.கு.சுப்புராஜ் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

விழாவில் இந்திய மருத்துவத்தின் 5 பிரிவுகளிலும் சிறப்பாக பணியாற்றிய 11 மருத்துவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. மேலும் 5 பிரிவுகளில் 2 பேர் வீதம் 10 ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியர்கள் விருதும் வழங்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தினமலர்

**பீட்ரூட் விலை சரிந்ததால் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2011,23:38 IST

பொங்கலூர்:பீட்ரூட் கொள்முதல் விலை தொடர்ந்து சரிந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பொங்கலூர் பகுதியில் வாவிபாளையம், வடமலை பாளையம், உகாயனூர், காட்டூர், வெள்ளநத்தம் உள்ளிட்ட பகுதிகளில் பீட்ரூட் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் கிராக்கி நிலவுவதாலும், குறுகிய காலத்தில் விளைந்து நல்ல மகசூல் கொடுப்பதாலும், பல விவசாயிகள் பீட்ரூட் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.இந்த சீசனில் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதாலும், தக்காளி, காலிபிளவர் உள்ளிட்ட காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதாலும், பீட்ரூட் கொள்முதல் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இரண்டு மாதத்தில்

நான்கில் ஒரு பங்காக விலை சரிந்து விட்டது. இது, பீட்ரூட் சாகுபடி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இரண்டு மாதத்துக்கு முன் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும், கடந்த மாதம் 10 ரூபாய்க்கும் விற்பனையானது. தொடர்ந்து படிப்படியாக விலை குறைந்து, தற்போது கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்பனையாகிறது.

விவசாயிகள் கூறுகையில், "இது, 75 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய விதை, உரம், மருந்து, நடவு, அறுவடை போன்றவற்றுக்கு, 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. நன்றாக பராமரிப்பு செய்தால், ஏக்கருக்கு ஐந்து முதல் எட்டு டன் வரை மகசூல் கிடைக்கும். கடந்த சீசனில் நல்ல விலை கிடைத்ததால், அதிகளவில் சாகுபடி செய்தோம். தற்போது விலை மிகவும் குறைந்துள்ள தால், முதலை கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,' என்றனர்.

**மாவடு சீசன்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2011,00:00 IST

"மாசி வடு பாசி போல இருக்கும்' என்ற பழமொழியும், "மாசி வடுவே, வைகாசி மாம்பழமே' என்ற தாலாட்டுப் பாடலும் மாசி மாதத்தில் இருந்து மாவடு சீசன் துவங்கும் என காட்டுகிறது. மாவடு என்பது மாம்பிஞ்சு என கருதப்பட்டாலும், மாவடு ஊறுகாய் செய்வதற்கு, மலைவடுவே சிறந்ததாகும். மரத்தில் இருந்து உதிர்ந்த வடுக்களை விட, பறிக்கப்பட்ட மாவடுக்களே ஊறுகாய் செய்ய ஏற்றதாகும்.

ஊறுகாய்க்கு மாவடு வாங்கும் போது அவை காம்புடன் இருக்க வேண்டும். இத்தகைய காரணங்களினால் சாதாரண வடுவை விட, மலை வடுவின் விலை மூன்று மடங்கு அதிகமாக இருக்கும். ஊறுகாய்களில் எண்ணெய் எதுவும் சேர்க்கப் படாமல் செய்யப்படும் ஊறுகாய் மாவடு ஆகும். மாவடுவில் நல்லெண்ணெய் எதுவும் சேர்க்கப்பட வில்லை.

மாவடு ஊறுகாயில் சேர்க்கப்படும் விளக்கெண்ணெய், பூச்சி, புழுக்கள் போன்றவை வராமல் பாதுகாக்கும் பொருளாகச் சேர்க்கப்படுகிறது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அழகர்கோவில் வடு பிரபலமானதாகும். ஸ்ரீரங்கத்தில் கிடைக்கும் வடு சுண்டைக்காய் அளவு தான் இருக்கும். சென்னையில் தான் மாவடுவின் விற்பனை அதிகமாக உள்ளது.

**காபி ஏற்றுமதி ரூ.3,789 கோடியாக அதிகரிப்பு**

ஏப்ரல் 02,2011,05:10



பெங்களூரு:நாட்டின் காபி ஏற்றுமதி, வியாழக்கிழமையுடன் நிறைவடைந்த, சென்ற 2010-11ம் நிதியாண்டில், அளவின் அடிப்படையில், 3.25 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய 2009-10ம் நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 59.31 சதவீதம் (2.04 லட்சம் டன்) அதிகமாகும்.

இதே ஆண்டுகளில், காபி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 75 சதவீதம் அதிகரித்து அதாவது, 2,165 கோடி ரூபாயிலிருந்து 3,789 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. டாலர் மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி 83.31 சதவீதம் வளர்ச்சி கண்டு 44.25 கோடி டாலர் என்ற அளவிலிருந்து 81.11 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

ஏற்றுமதிக்கான ஒரு டன் காபியின் விலை, இதே ஆண்டுகளில், 1 லட்சத்து 6 ஆயிரத்து 119 ரூபாயிலிருந்து, 1 லட்சத்து 16 ஆயிரத்து 540 ரூபாயாக உயர்ந்திருந்தது என காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு 2011ம் ஆண்டு, ஜனவரி 1ம் தேதி முதல் மார்ச் 30ம் தேதி வரையிலுமாக, அரபிகா பார்ச்மென்ட் வகை காபி ஏற்றுமதி 20 ஆயிரத்து 832 டன்னாக அதிகரித்துள்ளது.

இது,சென்ற 2010ம் ஆண்டின், இதே காலத்தில் 12 ஆயிரத்து 677 டன்னாக இருந்தது. இதே காலத்தில், அரபிகா செர்ரி வகை காபி ஏற்றுமதி 3,918 டன்னிலிருந்து 5,449 டன்னாகவும், ரொபஸ்டா பார்ச்மென்ட் காபி ஏற்றுமதி 5,344 டன்னிலிருந்து 7,386 டன்னாகவும், ரொபஸ்டா செர்ரி காபி ஏற்றுமதி 27 ஆயிரத்து 300 டன்னிலிருந்து, 45 ஆயிரத்து 482 டன்னாகவும் அதிகரித்துள்ளது.இன்ஸ்டன்ட் வகை காபி ஏற்றுமதியும், இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து, அதவாது, 5,581 டன்னிலிருந்து 12 ஆயிரத்து 721 டன்னாக உயர்ந்துள்ளது.

நம் நாட்டிலிருந்து, அமால்கமேட்டட் பீன் காபி நிறுவனம் மிக அதிகளவில், காபி ஏற்றுமதி செய்துள்ளது. இந்நிறுவனம், சென்ற ஆண்டில், மொத்தம் 12 ஆயிரத்து 114 டன் ( அரபிகா 6,285 டன் மற்றும் ரொபஸ்டா 5,830 டன்) காபி ஏற்றுமதி செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சி.சி.எல். புராடக்ட்ஸ் இந்தியா, என்.கே.ஜி. ஜெயந்தி காபி, அலானா சன்ஸ் நிறுவனம், போலா சுரேந்திரா காமத், ஓலம் அக்ரோ இந்தியா, ஐ.டி.சி., நெட் கமாடிட்டிஸ் இந்தியா, டாட்டா காபி மற்றும் ஈகாம் கில் காபி டிரேடிங் உள்ளிட்ட பல நிறுவனங்கள் மிக அதிகளவில் காபி ஏற்றுமதி செய்து வருகிறன்றன.

இந்தியாவிலிருந்து, இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ரஷ்ய குடியரசு நாடுகள், ஸ்பெயின், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு காபி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கடும் வறட்சி எதிரொலி: முதுமலை புலிகள் காப்பகம் மூடப்பட்டது



கடும் வறட்சியினால் முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதிக்குள் செல்லும் வழி மூடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

*மசினகுடி, ஏப்.2–*

*முதுமலை புலிகள் காப்பகம் வறட்சி காரணமாக நேற்று முதல் மூடப்பட்டது. இதனால் யானை சவாரி மற்றும் வாகன சவாரி ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*வன விலங்குகளின் உய்விடம்*

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகத்தில், காட்டில் இருந்து தாயை பிரிந்து வரும் யானைக்குட்டிகளை பராமரிக்க வளர்ப்பு யானைகள் முகாம் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் இருந்து செயல்பட்டு வருகிறது. மேலும் இங்கு பல்வேறு வகையான வனவிலங்குகள், விலை உயர்ந்த மரங்கள், அரிய மூலிகை செடிகள் உள்ளன. முதுமலை புலிகள் காப்பகம் தென்னிந்தியாவில் மிக சிறந்த வன விலங்குகள்*

உய்விடமாக திகழ்கிறது. இதன் சிறப்பிற்கு முக்கிய காரணம் இங்குதான் தமிழ்நாட்டிலேயே அதிகளவு புலிகள் வாழும் வன பகுதி உள்ளது. 80–க்கும் மேற்பட்ட புலிகள் இங்கு வசிக்கின்றன. ஆண்டு தோறும் புலிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் இதன் சிறப்பாக உள்ளது.

யானை சவாரி

கர்நாடகா மாநிலத்தில் இருந்து நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை முதலில் வரவேற்பது முதுமலை புலிகள் காப்பகம். இங்குள்ள வன விலங்குகளை கண்டு ரசிக்க வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவு வருகின்றனர்

சுற்றுலா பயணிகளுக்காக வனத்துறை சார்பில் முதுமலையில் வாகன சவாரி மற்றும் யானை சவாரி மேற்கொள்ளப்படுகிறது. வனத்துறையினர் தங்களின் வாகனங்களில் சுற்றுலா பயணிகளை வன பகுதிக்குள் அழைத்து சென்று வன விலங்குகளை காட்டுகிறார்கள்.

கடும் வறட்சி

ஆண்டு தோறும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏற்படும் கடும் வறட்சியினால் மார்ச் மாதம் இறுதியில் அல்லது ஏப்ரல் மாத தொடக்கத்தில் முதுமலை புலிகள் காப்பகம் மூடப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஓரளவு மழை பெய்தது. இதனால் புலிகள் காப்பகம் மூடப்பட வில்லை


ஆனால் தற்போது முதுமலை புலிகள் காப்பகத்தில் வறட்சி நிலவுகிறது. நீர்நிலைகள் வறண்டு விட்டன. இதனால் வன விலங்குகளுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதை கருத்தில் கொண்டு காட்டில் உள்ள குட்டைகளில் வனத்துறையினர் மூலம் தண்ணீர் ஊற்றப்படுகிறது.

மூடப்பட்டது

வறட்சியினால் காட்டுத்தீ பிடிக்கும் அபாய நிலை உள்ளது. இதனால் முதுமலை புலிகள் காப்பகத்தை மூட சென்னை வனத்துறை தலைமை அதிகாரிக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதன்படி தலைமை வனத்துறை அதிகாரியின் அனுமதியுடன் முதுமலை புலிகள் காப்பகம் நேற்று முதல் மூடப்பட்டதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் புலிகள் காப்பகத்திற்குள் செல்லும் வழிகள் அனைத்தும் மூடப்பட்டு உள்ளன. சுற்றுலா பயணிகள் அத்து மீறி வனப்பகுதிக்குள் நுழைந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீண்டும் புலிகள் காப்பகம் திறக்கப்படும் வரை யானை சவாரி மற்றும் வாகன சவாரி ரத்து செய்யப்படுவதாகவும் வனத்துறையினர் தெரிவித்தார்கள்.

*மார்ச் 31 வரையிலான 2 வாரங்களில் கோதுமை கொள்முதல் 33% சரிவு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மார்ச் 15 முதல் 31–ந் தேதி வரையிலான காலத்தில், இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் 33 சதவீதம் சரிந்து 2.61 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது முந்தைய 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 3.89 லட்சம் டன்னாக இருந்தது. நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் ஒரு குவிண்டால் (100 கிலோ) கோதுமைக்கான கொள்முதல் விலை ரூ.1,120–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*உற்பத்தி*

*இந்திய உணவுக் கழகத்தின் கைவசம் தற்போது ரூ.40,000 கோடி மதிப்பிற்கான கோதுமை உள்ளது. 2010–11 பருவத்தில் (ஜூலை– ஜூன்) கோதுமை உற்பத்தி 8.20 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதால், 2011–12–ஆம் நிதி ஆண்டில் கோதுமை கொள்முதல் வரலாறு காணாத அளவிற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*கோதுமை சந்தைப்படுத்துதல் பருவம் என்பது ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான ஆண்டு ஆகும். எனினும் மார்ச் 15–ந் தேதி முதலே கொள்முதல் தொடங்கி விடுகிறது. ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து ஜூன் மாதம் முடிய கோதுமை கொள்முதல் விறுவிறுப்புடன் நடைபெறுகிறது.*

*இந்தியாவில் கோதுமை உற்பத்தியில் பஞ்சாப், உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம் மற்றும்*

குஜராத் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. கடந்த இரண்டு வாரங்களில் மத்தியபிரதேசத்திலும், குஜராத்திலும் மட்டுமே கோதுமை கொள்முதல் தொடங்கியுள்ளது. இதர இரண்டு பெரிய மாநிலங்களிலும் இனிதான் கொள்முதல் தொடங்கும்.

கடந்த பருவத்தில்...

மத்தியபிரதேசத்தில் இதுவரை 2.60 லட்சம் டன் கோதுமை வாங்கப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 3.89 லட்சம் டன்னாக இருந்தது. அதே சமயம் குஜராத்தில் உணவுக் கழகத்தின் கொள்முதல் 97 டன்னிலிருந்து 439 டன்னாக அதிகரித்துள்ளது.

கடந்த 2010–11 சந்தைப்படுத்துதல் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட மொத்த கோதுமை 2.25 கோடி டன்னாகும்.

# 100 ஆண்டுகளை கடந்த ஆலமரம்




கோவை- திருச்சி ரோடு 4 வழிபாதையாக அகலப்படுத்தும் பணி நடந்து வந்ததைத்தொடர்ந்து, ரோட்டின் ஓரத்தில் இடையூறாக இருந்த மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விழுதுகளுடன் இருந்த ஒரு ஆலமரம் அகற்றப்படாமல் தப்பியது. நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையான இந்த மரத்தில் உள்ள விழுதுகள் வேர்களாக மாறி மரத்தை தாங்கி நிற்கும் காட்சியை படத்தில் காணலாம்.